# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

## உதவி அமர்வு நீதிமன்றம், பொள்ளாச்சி

| | | | |
|---|---|---|---|
| **அமர்வு வழக்கு எண்.** | **234/2023** | **அரசு தரப்பு** | **அ.சா.6** |
| **பெயர்** | **ரமேஷ்** | **தந்தை பெயர்** | **சின்னப்பன்** |
| **வயது** | **46** | **முகவரி** | **வால்பாறை** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873 of 10th day of March 2026.

**( இன்று விசாரணைக்கு எதிரிகள் 1,2,3 ஆஜர். )**

**முதல் விசாரணை**

நான் வால்பாறையில் குடியிருந்து வருகிறேன். வால்பாறையில் பாபு ஸ்டோருக்கு கீழ் தளத்தில் சபரி மெஸ் என்ற பெயரில் மெஸ் நடத்தி வருகிறேன். கடந்த 2018 ம்வருடம் சம்பவம் நடந்தது, தேதி மாதம் நினைவில்லை. எங்கள் கடைக்கு மேல் தளத்தில் உள்ள பாபு ஸ்டோர்ஸ் கண்ணாடியை யாரோ உடைத்து விட்டார்கள் என கேள்விப்பட்டேன். யார் உடைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது)

**குறுக்கு விசாரணை**

கடந்த 05.04.2018 ம் தேதி நான் எனது கடைக்கு வெளியே நின்று கொண்டிருந்தபோது என் கடைக்கு மேல் தளத்தில் உள்ள பாபு ஸ்டோர்ஸ் உரிமையாளர் லாலு என்பவர் கடையை திறந்து வைத்திருந்ததாகவும், அந்த

சமயத்தில் தி.மு.க கட்சியை சேர்ந்தவர்கள் வால்பாறை காந்தி சிலை அருகே ஆர்ப்பாட்டம் செய்ததாகவும், அப்போது அந்த கூட்டத்தில் இருந்த சௌந்தரபாண்டியன் என்பவர் யாரும் கடையை திறக்கக் கூடாது எனக் கூறியதாகவும் அப்போது அந்த சமயத்தில் பாபு ஸ்டோர்ஸ் திறந்து இருந்ததால் அதனை செந்தில் குமார் மற்றும் அருண்குமார் ஆகியோர் பாபு ஸ்டோர்ஸ் கண்ணாடியை உடைத்தாகவும் எதற்காக இப்படி உடைக்கிறீர்கள் என கேட்டதற்கு கெட்ட வார்த்தையில் திட்டி கொலை மிரட்டல் விட்டதாகவும் போலிஸ் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி